கீழே குறிப்பிடப்பட்டுள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகளால் நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி பீ.எல்.சீ. - பீ.கியு 118 (இதன் பின்னர் "வங்கி" என்றழைக்கப்படும்) இல் திறந்து பராமரிக்கப்பட்டு வருகின்ற நேஷன்ஸ் மெகா சேவர் கணக்கு கட்டுப்படுத்தப்படும்:

1. ஒரு கணக்கைத் திறப்பதற்கான ஆரம்ப குறைந்தபட்ச வைப்புத் தொகை ரூபாய் ஐந்து இலட்சம் (ரூ. 500,000/-) அல்லது வங்கியால் அவ்வப்போது தீர்மானிக்கப்படுகின்ற வேறொரு தொகையாக இருக்கும்.

2. கணக்கு நிலுவை ரூபாய் ஐந்து லட்சத்திற்கும் (ரூ. 500,000/-) குறைவாக இருந்தால், அந்த நிலுவைத் தொகைக்கு வட்டி எதுவும் செலுத்தப்பட மாட்டாது.

3. கணக்கின் நாளாந்த நிலுவையின் அடிப்படையில் வட்டி கணக்கிடப்படும் என்பதுடன், அது மாதந்தோறும் செலுத்தப்படும்.

4. வங்கிக்கு அதன் தனி முழுமையான விருப்புரிமையின் படி, மேலே குறிப்பிடப்பட்டுள்ள வட்டி வரம்புகள் மற்றும் வட்டி விகிதத்தை எந்த நேரத்திலும் மாற்றுவதற்கு, திருத்துவதற்கு, அதிகரிப்பதற்கு அல்லது குறைப்பதற்கு அதிகாரம் உண்டு.

5. வங்கியின் இணையத்தளம் மற்றும்/அல்லது கிளைகளிலுள்ள அறிவித்தல் பலகை மற்றும்/அல்லது வெளியீட்டுச் செய்திக் குறிப்புகள் போன்றவற்றின் ஊடாக வட்டி விகிதங்களில் ஏற்பட்டுள்ள திருத்தங்கள், மாற்றங்கள் பற்றிய அறிவித்தல்கள் அல்லது வேறு ஏதேனும் அறிவிப்புகள் வாடிக்கையாளருக்கு வழங்கப்பட்டுள்ள போதுமான அறிவிப்பாகக் கருதப்படும் என்பதுடன் வாடிக்கையாளர் அவற்றுக்குக் கட்டுப்படுதல் வேண்டும்.

6. வாடிக்கையாளரால் மூடப்படுகின்ற அனைத்து கணக்குகளும் அவ்வாறு மூடப்படுகின்ற எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கையாளுதல் கட்டண அறவீட்டுக்கு உட்படும்.

7. கணக்கில் குறைந்த பட்ச நிலுவை இருப்பதை அடிப்படையாக் கொண்டு அதை தடுக்கக் கூடாது.

8. எந்த நேரத்திலும் நேஷன்ஸ் மெகா சேவர் கணக்குகளை இடைநிறுத்த, வாபஸ் பெற, இரத்து செய்ய மற்றும்/அல்லது நிறுத்துவதற்கான மற்றும் அத்தகைய கணக்குகள் சாதாரண சேமிப்புக்கணக்குகளாக கருதப்படும் உரிமையை வங்கி கொண்டுள்ளது.

9. இந்த நியதிகள் மற்றும் நிபந்தனைகளானது வாடிக்கையாளரை பிணைக்கின்ற நேஷன்ஸ் சேவர் கணக்குகளின் நியதிகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் வங்கியின் ஏனைய வழமையான வியாபார நிபந்தனைகளுக்கு மேலதிகமாக இருக்கும் என்பதுடன், இங்கு குறிப்பிடப்பட்டுள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகளில் சேர்ப்பதற்குத் தேவையான அளவிற்கு மட்டுமே மாற்றியமைக்கப்பட வேண்டும்.

10. இந்த நியதி, நிபந்தனைகள் மற்றும் நேஷன்ஸ் சேவர் கணக்குகளின் நியதி, நிபந்தனைகள் அல்லது வேறு ஏதேனும் நியதி, நிபந்தனைகள் ஆகியவற்றுக்கு மத்தியில் ஏதேனும் முரண்பாடுகள் ஏற்பட்டால், அத்தகைய முரண்பாட்டின் அளவிற்கு மட்டுமே அவை செயற்படுத்தப்பட வேண்டும்.

11. நேஷன்ஸ் சேவர் கணக்கைக் கட்டுப்படுத்துகின்ற மேற்படி நியதிகள், நிபந்தனைகள் மற்றும் வங்கியின் வழமையான வியாபார நிபந்தனைகள் (GBC) ஆகியவற்றுடன் இந்தத் திட்டம் தொடர்பான விபரங்கள் பற்றி இங்கு கையொப்பம் இடப்படுவதற்கு முன்னர் எனக்கு/எமக்கு விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்துவதுடன், மேற்படி நியதிகளையும் நிபந்தனைகளையும் நான்/நாங்கள் வாசித்து, விளங்கி அவற்றுக்குக் கட்டுப்படுவதற்கு இத்தால் இணக்கம் தெரிவிக்கின்றேன்/றோம்.

.....
கையொப்பம்

பெயர்

.....
கையொப்பம்

பெயர்